3. கவன ஈர்ப்பு.

(அ) சென்னையில் அரிசி விலை ஏற்றம்.

திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''சென்னை நகரில் வெளிச் சந்தையில் அரிசி விலை ஏற்றத்தினால் மக்கள் பெரிதும் பாதிக்கப்படுவது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உணவு அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். (கூச்சல், குழப்பம்).

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நிறைய பெருந்தன்மையோடு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்—மிகுந்த பெருந்தன்மையோடு—சொன்னதால் நேற்று எல்லாவற்றையும் நீக்கி விட்டேன். அவருடைய பெருந்தன்மைக்காகத்தான் நீக்கினேன். நேற்றையதினம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை எவ்வளவோ விமர்சனம் செய்த பிறகும் அவர் பெருந்தன்மையோடு அதையெல்லாம் நீக்க வேண்டுமென்று சொன்னார்கள். அதனால்தான் நீக்கினேன். அந்தப் பெருந்தன்மையைப் பாராட்டக் கூடாதா? (குறுக்கீடு) நேற்றே எல்லாம் போய்விட்டது. நாடு தெரிந்து கொண்டது. (குறுக்கீடு) அதுவும் போய்விட்டது. வேண்டுமானால் மீண்டும் ஒரு நாள் விவாதத்தை வைத்துக் கொள்ளலாம். முடிவு எடுங்கள். (குறுக்கீடு).

*மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவையின் முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

சென்னை நகரில் வெளி அங்காடியில் புழுங்கலரிசி சாதாரண ரகம் (Common) சில்லறையில் கிலோ 3.70 லிருந்து ரூ. 3.80 வரையிலும், சன்ன ரகம் ரூ. 4.20 லிருந்து ரூ. 4.30 வரையிலும் விற்கப்படுகிறது. சென்ற ஆண்டு இதே காலத்தில் இவைகளின் விலை முறையே ரூ. 3.50 லிருந்து ரூ. 3.55 வரையிலும் ரூ. 3.80 லிருந்து ரூ. 3.85 வரையிலும் விற்கப்பட்டு வந்தது. தமிழகத்தில் தற்போதைய சராசரி சாதாரண ரக புழுங்கலரிசியின் சில்லறை விலை ரூ. 3.68 ஆகவும், சன்னரக புழுங்கலரிசியின் சில்லறை விலை ரூ. 4.06 ஆகவும் நிலவி வருகிறது. இவற்றின் விலை சென்ற ஆண்டு இதே காலத்தில் முறையே ரூ. 3.47

[திரு. ச. இராமச்சந்திரன்] [1987 மார்ச் 11

ஆகவும், ரூ. 3.87 ஆகவும் இருந்தது. இந்த ஓராண்டுக் காலத்தில் தமிழ்நாட்டில் சராசரி விலை உயர்வு புழுங்கலரிசி சன்ன ரகத்திற்கு 4.9 விழுக்காடும், புழுங்கலரிசி சாதாரண ரகத்திற்கு 6.1 விழுக்காடும், அதிகரித்துள்ளது. சென்னையில் இந்த ஓராண்டுக் காலத்தில் புழுங்கலரிசி சாதாரண ரகத்திற்கு 7.0 விழுக்காடும், புழுங்கலரிசி சன்ன ரகத்திற்கு 9.1 விழுக்காடும் அதிகரித்துள்ளது.

இந்த ஆண்டு பிப்ரவரி திங்கள் இரண்டாவது வாரத்தில் இருந்து ஆந்திரபிரதேச அரசு வெளிமாநிலங்களுக்கு அரிசி எடுத்து செல்வதற்கான அனுமதி வழங்கவில்லை. இதன் காரணமாக ஆந்திராவிலிருந்து தமிழகத்திற்கு அரிசி வருவது மிகவும் குறைந்து விட்டது. மேலும் பணவீக்கத்தின் காரணமாக ஆண்டுக்கு ஆண்டு விலைவாசி உயர்வது இயல்பான நிகழ்ச்சியாகும். 1986 சனவரியில் மொத்த விலைக்குறியீட்டு எண் (அனைத்துப் பொருட்கள்— All commodities) இந்திய அளவில் 358 லிருந்து 1986 அக்டோபரில் 385 ஆக, 7.5 விழுக்காடு உயர்ந்துள்ளது. இந்நிலையில் மற்றப் பொருட்களின் விலை உயர்வுடன், ஒப்பிடும் போது, சாதாரண ரக அரிசியின் விலை உயர்வு அதிகமில்லை.

* * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது தேவையில்லாத பிரச்சினை. (குறுக்கீடு).

திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசு, குறிப்பாக மாண்புமிகு புரட்சித் தலைவர் திரு. எம். ஜி. ஆர். அவர்கள் மக்களைப் பாதுகாப்பதற்காக, நியாய விலைக் கடைகளில் அரிசியின் விலையைக் கட்டுப்படுத்தி பாதி விலைக்கு பல கோடி மக்களுக்கும் விநியோகம் செய்து கொண்டிருக்கிறார். ஆனால் வெளிச் சந்தையில் உள்ள வியாபாரிகள் இந்த அரசுக்குக் களங்கம் ஏற்படுத்துகிற வகையில் அதிகமான கொள்ளை லாபம் சம்பாதிக்கும் வகையில் அதிக விலைக்கு அரிசியை விற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை அரசு அறியுமா? (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என் அனுமதியில்லாமல் எழுந்து நிற்பது முறையல்ல. ** அது நேற்றே முடிந்துவிட்டது. நேற்று பேசியது முழுவதும் நேற்றே முடிந்துவிட்டது, நீக்கப் பட்டுவிட்டது. (குறுக்கீடு).

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவைக் குறிப்பிலிருந்து நீக்கப் பட்ட ஒரு பொருளைக் குறித்து விவாதம் எழுப்புவது என்பது முறையல்ல. அவைக் குறிப்பில் இருக்கிற ஒன்றை எடுத்து அதைக் குறித்து விளக்க வேண்டுமென்றால் அது நியாயம். அவைக்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

1987 மார்ச் 11] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

குறிப்பிலேயே இல்லாத, அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்ட விஷயங்களைக் குறித்து மறுபடியும் கிளப்புவது நியாயமாகாது. (குறுக்கீடு) அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டுவிட்டது. ** (குறுக்கீடு).

திரு. கைதை சா.துரைசாமி : தலைவர் அவர்களே, எனவே வெளிச் சந்தையில் விலையை அதிகமாக ஏற்றி, கொள்ளை லாபம் அடிக்கிற வியாபாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன். (குறுக்கீடு) **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது நாட்டுப் பிரச்சினை, உங்கள் பிரச்சினை அல்ல. மீண்டும் என்னைப் பேச வைத்து விடாதீர்கள். மீண்டும் சர்வ கட்சித் தலைவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். எது நியாயம் என்று பார்த்துக் கொள்ளுங்கள்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசைப் பொறுத்தவரையில். . . . . . .(குறுக்கீடு).

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றயதினமே ** பற்றி சொன்னக் கருத்துக்களும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டுவிட்டன. அதைப்பற்றி இங்கே மீண்டும் கிளப்புவதற்கு உரிமையில்லை. (குறுக்கீடு) அவைக் குறிப்பில் இல்லாத ஒன்றை, அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டுவிட்ட ஒன்றைப்பற்றி இங்கே விளக்கம் கேட்க முடியாது. அவரைப்பற்றி குறிப்பிட்ட பகுதியும் நீக்கப் பட்டுவிட்டது. மறுபடியும் கிளப்பக் கூடாது. அது நீக்கப் பட்டு விட்டது. அதுதான் மரபு. (குறுக்கீடு) **.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதம் மீண்டும் வேண்டுமானால்—சர்வ கட்சித் தலைவர்களைக் கேட்கிறேன். வேண்டுமானால் பார்க்கலாம். இதையெல்லாம் பற்றி என்னுடைய அறைக்கு வந்து பாருங்கள். இது தேவையில்லை. இதையெல்லாம் நீக்கிவிடுகிறேன். அவைக் குறிப்பில் இது தேவையில்லை.

(முற்பகல் 11–10.)

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, நியாயவிலைக் கடைகளைப் பொறுத்தவரையில் கடந்த பல ஆண்டுகளாக கிலோ அரிசி ரூ. 1.75 என்கின்ற வகையில் மாண்புமிகு புரட்சித் தலைவர் அரசு. . (குறுக்கீடு) வெளிச்சந்தயைப் பொறுத்தவரையில் வியாபாரிகளின் விலையில்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

தலையிடுவது என்பது இயலாத காரியம். ஆனால் பொது விநியோக முறையின் மூலமாக எந்த அளவிற்கு மக்களுக்குத் தேவையோ அந்த அளவிற்கு அரிசி வழங்குவதற்கு அரசு தயாராக இருக்கிறது.

திரு. வைகை சா. துரைசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஆந்திர மாநிலத்திலிருந்து அரிசி கொண்டு வருவது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். எனவே ஆந்திர மாநில அரசோடு பேசி இங்கே அரிசி கொண்டு வர அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, போதுமான அளவிற்கு அரிசி நம்மிடத்திலே இருக்கிறது. தேவைப்படுமானால் ஆந்திர அரசோடு பேசி ஆவன செய்வதற்கு நமது அரசு தயாராக இருக்கிறது.

(ஆ) சென்னை அரசினர் கலைத் தொழில் கல்லூரி மாணவர்கள் போராட்டம்

திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''சென்னையில் உள்ள அரசினர் கலைத் தொழில் கல்லூரி மாணவர்கள், 'டிப்ளமாவிற்கு' பதிலாக 'பட்டமாக்கக்' கோரி உள்ளிருப்புப்போராட்டம் நடத்துவது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி மற்றும் சட்ட அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :

அறிக்கை.

சென்னையிலுள்ள அரசினர் கலைத் தொழில் கல்லூரி மாணவர்கள் கடந்த 19—1—1987 லிருந்து ஏறத்தாழ 6 வாரகாலம் கீழ்க்கண்ட கோரிக்கைகளை முன் வைத்து உள்ளிருப்புப் போராட்டம் நடத்தினார்கள் :

(i) தற்போதுள்ள டிப்ளமா பாடத்தை, பட்டப் படிப்பு நிலைக்கு மாற்றுதல்.

(ii) தற்போதுள்ள விஷுவல் கம்யூனிகேஷன் டிசைன் மற்றும் இண்டஸ்டிரியல் டிசைன் பட்டப் படிப்புகளுக்கு சென்னை பல்கலைக் கழகத்தின் நிரந்தர இணைப்பு கோரல்.

(iii) மாணவர் சங்கத்தினை சட்ட பூர்வமாக அங்கீகரித்து அனுமதி அளித்தல்.